## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 151 of 2020

பெயர் : திரு. கிருஷ்ணமூர்த்தி

தந்தை பெயர் : திரு. சுந்தரம்

வா.த.சா : 1

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 22.09.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 - மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார்.

பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

பிரதிவாதிகள் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். மேற்படி எதிர் உரையில் சர்வே நெம்பர்.111/1-ல் எனக்கு 1.92 ஏக்கர் நிலம் மட்டுமே சொந்தம் என்றும், நான் வழக்குரையில் சொல்லியுள்ளதுபோல் 2.42 ஏக்கர் நிலம் எனக்கு சொந்தம் அல்ல என்றும் கூறியுள்ளார்கள் என்றால் அது அவர்களின் கருத்து அதை நான் மறுக்கிறேன். 2.42-ஏக்கர் நிலம் எனக்கு பாத்தியம் என்பதனை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

2. சர்வே எண்.104/1-ல் எனது தகப்பனாருக்கு எந்த நிலமும் பாத்தியம் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் ராஜன் பிள்ளையிடமிருந்து 17.04.1964-ல் நிலம் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். பழைய சர்வே எண்.110/-ல் 1.26 ஏக்கரில் 0.44 செண்டு மற்றும் சர்வே எண்.106/17-ல் 3.76-ஏக்கரில் 0.14 செண்டு நிலமும், சர்வே எண்.111/1-ல் 2.42-ஏக்கரில் 0.42 செண்டு நிலம் ஆக மொத்தம் இந்த மூன்று நிலங்களைத்தான் 17.04.1964-ல் எனது தந்தை ராஜம் பிள்ளையிடமிருந்து கிரயம் பெற்றார்.

3. அதே தேதியில் ராமசாமி பிள்ளை என்பவரிடமிருந்து எனது தகப்பனார் நிலம் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரயப் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். ராமசாமி பிள்ளையிடமிருந்து எனது தகப்பனார் சர்வே எண்.111/1ல் 2.42 ஏக்கரில் 1 ஏக்கர் நிலம் மட்டும் கிரயம் பெற்றார்.

4. வா.த.சா.ஆ-1ன்படி எனது தகப்பனார் திரு. மகாலிங்கம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற கிரயம் ஆவணம் ஆகும். அதில் சர்வே நெம்பர் 111/1ல் சம்மந்தப்பட்ட எந்த நிலமும் கிரயம் பெறவில்லை என்றால் சரிதான். (சாட்சி மேற்படி ஆவணத்தை படித்துப் பார்த்து இல்லை என்று கூறினார்)

5. எனது தந்தை நடேச பிள்ளை என்பவரிடமிருந்தும் நிலம் கிரயம் வாங்கினார். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின்படி எனது தந்தை சர்வே நெம்பர் 111/1-ல் 2.42-ஏக்கரில் 0.50 செண்டு நிலமும், 110/-ல் 1.26 ஏக்கரில் 0.06 செண்டு நிலமும் மட்டுமே எனது தந்தை கிரயம் வாங்கினார் என்றால் சரிதான்.

6. ராஜம் பிள்ளை, ராமசாமி பிள்ளை , நடேச பிள்ளை ஆகியோரிடமிருந்து எனது தந்தை கிரயமாக வாங்கிய நிலத்தின் மொத்த அளவு சர்வே நெம்பர்.111/1-ல் 1.92 ஏக்கர் மட்டுமே என்றால் சரியல்ல. மேற்படி நபர்களிடமிருந்து எனது தந்தை கிரயம் பெற்ற கிரய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மையான அளவு தெரிய வந்துவிடும் என்பதற்காக வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. அசல் வழக்கு எண்.960/1970-என்ற வழக்கை எனது தந்தை ரங்கசாமி வகையறா மீது தாக்கல் செய்தார். எங்கள் நிலத்தை ரங்கசாமி வகையறா ஆக்கிரமிப்பு செய்ததால் மேற்படி வழக்கை தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு சர்வே நெம்பர் 111/1ல் 0.42 செண்டு நிலத்திற்குதான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிலம் மொத்த விஸ்தீரணம் 2.42 ஏக்கர் மேற்கு பக்கம் என்றால் சரியல்ல. வடக்கு பக்கம் அமைந்துள்ளது. வா.த.சா.ஆ-2-ன்படி மேற்படி வழக்கு சொத்து 111/1ல் 0.42 செண்டு

நிலமானது மொத்த விஸ்தீரணம் 2.42 ஏக்கரில் மேற்கு பக்கம் அமைந்துள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. வழக்கு எண்.960/1970 உள்ள சர்வே நெம்பர்.111/1-ல் 0.42-செண்டு நிலத்திற்கு நான்கு எல்லைகள் என்ன என்றால் - கிழக்கே-மகாலிங்கம் பிள்ளை நிலம், மேற்கே-ராமசாமி பிள்ளை நிலம், வடக்கே- நடேச பிள்ளை நிலம் மற்றும் தெற்கே- சடையற் நிலம் என்பவரது நிலம் உள்ளது. (சாட்சி தற்போது தனக்கு நான்கு எல்லைகள் சரியாக நினைவில் இல்லை என்று கூறினார்)

9. வழக்கு எண்.960/1970-ல் பிரதிவாதிகள் 1முதல் 3 தரப்பினர்கள் அல்ல என்றால் சரியல்ல. அந்த வழக்கில் ரங்கசாமி, செங்கமலம், சின்னபாப்பா, ஹரிராமன், பாண்டுரங்கன், அம்பிகா, சங்கர் ஆகியோர்கள் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டனர். 2-ம் பிரதிவாதி ஆகாசவாணி அந்த வழக்கில் பிரதிவாதி அல்ல என்றால் சரிதான். ஆனால் அவரது கணவர் பாண்டுரங்கன் பிரதிவாதியாக இருந்தார்.

10. வா.த.சா.ஆ-3ன்படி அதில் குறிப்பிடப்பட்ட அ-அட்டவணை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் சர்வே எண்.111/1A-ல் 2.42-ஏக்கரில் 1.42 ஏக்கர் நிலம் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதே சர்வே எண்ணில் 0.14 செண்டு இரண்டாவது அயிட்டமாக எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதே சர்வே எண்ணில் 0.22 செண்டு மூன்றாவது அயிட்டமாக எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதே சர்வே எண்ணில் 0.05 செண்டு நான்காவது அயிட்டமாக எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி சர்வே நெம்பர் 111/ல் மேற்படி 4 அயிட்ட நிலம் மட்டுமே எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படி எனக்கு 1.83 செண்டு நிலம் கிடைத்தது என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)